1987 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 1966 ஆம் வருட பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர் (வேலை நிலைமைகள்) சட்டத்தின் கீழ் ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள 206 உதவி ஆய்வாளர்கள், 30 துணை ஆய்வாளர்கள், 17 துணை ஆய்வாளர்கள் (குறைந்தபட்சக் கூலி), மற்றும் 19 தொழிலாளர் துறை ஆய்வாளர்கள், ஆண் அல்லது பெண் என்ற பாகுபாடு ஏதும் இல்லாமல் பீடிசுற்றும் தொழிலாளர்களின் நலத் திட்டங்களை அமுல் செய்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி பெண்களுக்கு மட்டும் போடப்படுமா என்பது. இதிலே பாகுபாடு வேண்டாம் என்கின்ற வகையிலேதான் அந்தப் பதில் இல்லையென்று வந்திருக்கிறது. ஆகவே இப்பொழுதே நன்றி சொல்லலாம்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக மேலப்பாளையத்தில் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் மிகப் பெரும்பாலோர் பெண்களாக இருக்கிற காரணத்தால், ஒரு பெண் ஆய்வாளரை நியமிப்பது பற்றி அரசு ஆராயுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆய்வாளர்கள் என்று பொதுவாக இருக்கிறது. ஆய்வாளர்களிலே பெண்கள் இருக்கிறார்களா என்ற விவரம் என்னிடத்திலே இல்லை.

தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறை மணல்மேட்டில்
ஈ. எஸ். ஐ. மருத்துவமனை அமைத்தல்.

85—(*வினா எண் 10838) திரு. மு. தங்கமணி : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறை, மணல்மேடு கூட்டுறவு நூற்பாலை தொழிலாளர்களுக்கு ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை அமைத்திடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் மயிலாடுதுறையில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துமனை (E. S. I. Hospital) ஏற்படுத்த கருத்துரு ஏதும் இல்லை. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் (E. S. I. Dispensary) ஏற்படுத்துவதற்கான செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மு. தங்கமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செயற் குறிப்பு இருப்பதாகச் சொன்னார்கள். மயிலாடுதுறை கூட்டுறவு நூற்பாலையில் 800—க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். அதற்கு மேலாக கூட்டுறவுச் சர்க்கரை ஆலை என்னுடைய தொகுதியில் தொடங்கப்பட்டிருக்கிறது. அதில்

400-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள் எனவே, வருகிற ஆண்டில் துரிதமான நடவடிக்கை எடுத்து, தொழிலாளர்களுக்கு சிறப்பு வைத்தியம் செய்வதற்கு ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை ஏற்படுத்தித் தர செயற்குறிப்பு உள்ளதா என்பதையும், அது எவ்வளவு மதிப்பீட்டில் செயல்பட இருக்கிறது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அப்பகுதியில் ஈ.எஸ்.ஐ. மொபைல் டிஸ்பென்சரி, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி நடமாடும் மருந்தகம் ஒன்றை அமைக்கலாம் என்று தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மண்டல இயக்குநர் கருத்து தெரிவித்துள்ளார். இதை அரசு பரிசீலித்து முடிவெடுக்கும்.

வடஆற்காடு மாவட்டத்தில் நவீன அரிசி ஆலை.

246—(*வினா எண் 7378) திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டத்தில் நவீன அரிசி ஆலை ஒன்று அமைக்க அரசிடம் திட்டமுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில், போளூர் என்ற ஊரில் அரசுக்குச் சொந்தமான நிலத்தில் நவீன அரிசி ஆலை ஒன்றை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் கட்டி வருகிறது.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நவீன அரிசி ஆலையைக் கட்டுவதற்கு ஆகின்ற மொத்தச் செலவு எவ்வளவு என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சுமார் 125 இலட்சம் ரூபாய் ஆகும்.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள மொத்த நவீன அரிசி ஆலைகள் எவ்வளவு என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தற்பொழுது இருப்பது 13 ஆலைகள். அமைக்க இருப்பது 6 ஆலைகள். தனியாரிடத்திலேயிருந்து, சிதம்பரத்திலே இருந்து ஒன்றை எடுத்து நடத்தி வருகிறோம்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் போளூரில் நவீன அரிசி ஆலை அமைய இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள்